**அரசாங்க நிறுவனங்களுடைய தற்காலிக மிகை நம்பிக்கை பொறுப்பு நிதியம் - 2014**

---

அரசாங்க நிறுவனங்களுடைய தற்காலிக நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, நம்பிக்கை பொறுப்பு மூலதனக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2005 ஆகஸ்ட் 03 இல் கைச்சாத்திடப்பட்ட 109 ஆம் இலக்க நம்பிக்கை பொறுப்பாளரின் ஒப்பந்த ஆவணத்தின் 23 ஆம் பிரிவுடன் இணைந்து 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(2) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. எனது கணக்காய்வினை மேற்கொள்கையில் பொதுத்தொழிலுள்ள பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனமொன்றின் உதவி பெறப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரட் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரியிடமிருந்து பெறவேண்டிய மீதியின் உள்ளதன்மையை சரிசெய்வதற்கு இயலாத நிலையிலிருந்தேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக, கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு என்னால் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றினை பெறமுடியாத நிலையிலுள்ளேன். அதற்கிணங்க, என்னால் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த முடியாதுள்ளேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரியிடமிருந்து பெறவேண்டிய ரூபா 484,776,812.63 தொகைக்காக திறைசேரியிடமிருந்து மீதி உறுதிப்படுத்தல் குறித்த திகதி வரை கிடைக்காமை அல்லது மேற்குறிப்பிடப்பட்ட மீதியை சரிபார்ப்பதற்கு எந்த சான்றும் பெற்றுக்கொள்ளாமையால் அவ் மீதியின் உள்ளதன்மையை என்னால் உறுதிப்படுத்த முடியாதுள்ளேன்.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2005 ஆகஸ்ட் 03 இல் கைச்சாத்திட்ட நம்பிக்கை பொறுப்பாளரின் ஒப்பந்த ஆவணத்தின் 12 ஆம் பிரிவின் (அ) ஆம் பந்தியின் படி நம்பிக்கை பொறுப்பாளர் சபை குறைந்தது மூன்று மாதங்களிற்கு ஒரு தடைவ கூட்டப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது எந்தவொரு கூட்டமும் நடைபெறவில்லை.

(ஆ) 2006 யூன் 27 ஆந் திகதிய புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தின் (எம்ஓயூ) 6 ஆவது விடயத்தின் படி, குறைந்தது ஆறு மாதங்களிற்கான அவற்றினுடைய உத்தேச நிதிப்பாய்ச்சல் விபரங்களை நிதிய முகாமையாளர்களிற்கு சமர்ப்பிக்குமாறு நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் தனிப்பட்ட பங்கேற்றல் அரசாங்க நிறுவனங்களை நம்பிக்கை பொறுப்பாளர்கள் கோரலாம். எவ்வாறாயினும், அத்தகைய உத்தேச நிதிப் பாய்ச்சல்கள் மீளாய்வாண்டிற்காக நிதிய முகாமையாளரால் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

## 3.1 நிதிசார் விளைவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் தொழிற்பாடுகள் பங்குலாபத்திற்கு முன்னரான தேறிய வருமானம் ரூபா 95.95 மில்லியனாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் தொழிற்பாடுகள் பங்குலாபத்திற்கு முன்னரான தேறிய வருமானம் ரூபா 110.01 மில்லியனாக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் 14.06 மில்லியனால் 12.78 சதவீதத்தினால் குறைவொன்றைக் காட்டுகின்றது. முதலீடுகளால் ஏற்பட்ட வீழ்ச்சியால் வட்டி வருமானம் குறைந்தமை இந்தக் குறைவிற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

(ஆ) அரசாங்க நிறுவனமொன்று ரூபா 59.56 மில்லியன் தொகையை மாத்திரம் நம்பிக்கை பொறுப்பின் நிதியத்தில் வைப்பிலிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது நிதியத்திடமிருந்தால் பற்றுதல்கள் ரூபா 204.88 ஆகும். ஆகையால் இந்த நிலைமை இலாபத்தன்மையும் மற்றும் பொறுப்பு நிதியத்தின் தொடர்ந்து செல்லும் தன்மையும் பாதகமாக பாதிக்ககூடுமென அவதானிக்கப்பட்டுள்ளது.

(இ) நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பிரதான வருமான மூலமான முதலீட்டு வட்டி இருந்தது. எனினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 78.36 மில்லியனால் குறைவடைந்திருந்தது.

(ஈ) முதலீட்டாளர்களிற்கான தனியான கோவைகள் மற்றும்இருபக்க பேரேடுகளை பராமரித்தல்.

(i) நிதியத்தின் 18 முதலீட்டாளர்கள் இருந்த போதிலம், உரிய ஆவணங்களுடன் ஒவ்வொரு முதலீட்டாளர்களிற்காக தனிப்பட்ட கோவைகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிக்கூற்றுக்களின் விரைவானதும் மற்றும் இலகுவானதும் தயார்படுத்தலுக்கான தேவையான அனைத்து கணக்குளிற்காவும் முறையான பேரேடுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | பேரேட்டுக் கணக்குகள் | நம்பிக்கை பொறுப்பு நிதியத்தால் முறையான பேரேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | முதலீட்டாளர் ஆவணங்கள் | உரிய அனைத்து ஆவணங்களுடன் ஒவ்வொரு முதலீட்டாளர்களிற்கான தனியான கோவைகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | மீளளிப்புக்கள் | வைப்புக்களின் 344 சதவீதமான மீளளிப்புக்கள் பதிவு செய்யப்பட்டது. |
| (ஈ) | பொறுப்பு உறுதியுடன் இணங்காமை | 2014 ஆம் ஆண்டின் போது பொறுப்பாளர்களிற்கான சபைக்கூட்டம் நடைபெற்றிருக்கவில்லை. |